மற்றும் புறநோயாளிகளுக்கும் சிகிச்சை அளிக்கப்படுகிறது. மேலும், கர்ப்பகால பரிசோதனைக்கான தேதியை, online மூலம் பதிவு செய்தல் இவை அனைத்தையும் செய்துகொண்டிருக்கிறார்கள். கர்ப்பிணித் தாய்மார்களுக்கு தடுப்பூசி போடுதல், இரத்த அழுத்தம் மற்றும் எடை பார்த்தல் ஆகியவற்றுடன் ஆய்வுக்கூட பரிசோதனைகளான இரத்த வகைகளைக் கண்டறிதல், Hemoglobin பரிசோதனை, சிறுநீர் பரிசோதனை, நீரிழிவு நோய் மற்றும் கர்ப்பகால இரத்த அழுத்த பரிசோதனை ஆகிய அனைத்தும் செய்யப்படுகின்றன. அனைத்து மருத்துவமனைகளிலும் மருத்துவர்கள் இல்லை என்று சொன்னார்கள். தற்போதுகூட 84 மருத்துவர்கள் ஒப்பந்த அடிப்படையில் எடுக்கப்பட்டு பணிபுரிந்துகொண்டிருக்கிறார்கள். வேறு எங்கும் மருத்துவர்கள் இல்லை என்றால், வாரா வாரம் நடைபெறும் மாநகராட்சி மருத்துவர்கள் ஆய்வுக் கூட்டத்தின்போது எங்களது கவனத்திற்கு வரும். மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரோடும் இணைந்து கூட்டம் நடத்தியிருக்கிறோம். அவர்களும் எங்களுக்குத் தேவையான அளவிற்கு உதவி செய்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி சிறப்பாக நடந்துகொண்டிருக்கின்றது. இதனை ஒரு பாலிசியாகத்தான் எடுத்துள்ளார்கள். அனைத்து இடங்களிலும், மண்டலத்திற்கு ஒன்று என்று இருக்கின்றது. சமுதாய நலக் கூடமாகவும் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஆகவே, ஏதேனும் ஓரிடத்தில் மருத்துவர்கள் இல்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டால், அவசியமிருப்பின் அதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 114, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. சந்திரசேகர், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

114—

கலை மற்றும் அறிவியல் கல்லூரி

***10962—திரு. இரா. சந்திரசேகர்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2017 ஜூலை 3]

(அ) மணப்பாறை தொகுதி, மருங்காபுரி ஒன்றியத்தில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை தொகுதி, மருங்காபுரி ஒன்றியத்தில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. சந்திரசேகர் அவர்கள்.*

திரு. இரா. சந்திரசேகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்தும் மறையாமலும் தமிழக மக்கள் மனதிலே நீங்கா இடம் கொண்டு, வங்கக் கடலோரம் துயில் கொண்டிருக்கும் தன்னிகரில்லா தங்கத் தலைவி, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள் விட்டுச்சென்ற அளப்பறிய பணிகளை தமிழக மக்களுக்கு தொய்வின்றி, மாண்புமிகு அம்மா அவர்கள் எண்ணிய எண்ணங்களுக்கு செயல் வடிவம் கொடுக்கும் வகையில் சிறந்ததோர் அம்மா அவர்களின் ஆட்சியை வழிநடத்திச் செல்லும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். மணப்பாறை சட்டமன்றத் தொகுதி, மருங்காபுரி ஒன்றியம், மிகவும் பின்தங்கிய பகுதியாகும். இங்குள்ள மக்கள் அனைவரும் கூலித் தொழிலையே நம்பி வாழ்கின்றனர். அவர்களுடைய குழந்தைகள் மேற்படிப்பு படிக்க சுமார் 75 கி.மீ. தூரம் உள்ள திருச்சிக்கு சென்றும், மதுரை மாவட்டம், மேலூருக்குச் சென்றும், கரூர் மாவட்டம், குளித்தலைக்குச் சென்றும் படிக்க வேண்டிய நிலையிருப்பதால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களும் இப்பகுதிக்கு ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரியினை அமைத்துத்தர முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10-30

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலே இருக்கின்றார். திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைப் பொறுத்தவரை, 3 அரசு கல்லூரிகளும், 9 அரசு நிதி உதவி பெறும் கல்லூரிகளும், 15 சுய நிதிக் கல்லூரிகளும், 2 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளும், ஆக மொத்தம் 29 கல்லூரிகள் அந்த மாவட்டத்தில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஏற்கெனவே 2016-2017 ஆம் கல்வியாண்டைப் பொறுத்தவரையில், மாணாக்கர்களின் சேர்க்கை எண்ணிக்கையினைப் பார்க்கின்றபோது, அந்த 29 கல்லூரிகளையும் சேர்த்து, 19,205 மாணாக்கர்களுக்கு ஒப்பளிக்கப்பட்டிருந்தது. ஆனால், 17,892 பேர் மட்டும்தான் சேர்ந்திருக்கின்றார்கள். அந்தக் கல்வியாண்டில் 1,313 மாணாக்கர்களின் சேர்க்கையிடம் காலியாக இருக்கின்றது. ஆகவே, புதிதாக அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை, உறுப்பினர் சார்ந்திருக்கின்ற மணப்பாறை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மருங்காபுரி ஒன்றியத்தில் தற்சமயம் அமைக்க தேவை எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. சந்திரசேகர் அவர்கள்.*

திரு. இரா. சந்திரசேகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய கழகத்தின் நிறுவனத் தலைவர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களின் மறைவிற்குப் பிறகு, கழகம் இரண்டாகப் பிளவுபட்டு, மீண்டும் இரட்டை இலைச் சின்னத்தை மீட்டு, அன்று நடந்த இடைத் தேர்தலில், மருங்காபுரி தொகுதி மக்கள் வாக்களித்து, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய எஃகுக் கோட்டையாக விளங்குகின்ற (மேசையைத் தட்டும் ஒலி) மருங்காபுரி பகுதி, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தின் கடைக்கோடி பகுதியாகும். அங்குள்ள மாணாக்கர்கள் படிக்க வேண்டுமென்றால், சுமார் 75 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள திருச்சிராப்பள்ளி, மேலூர் அல்லது குளித்தலைக்குச் சென்று படிக்க வேண்டியிருப்பதால், மாண்புமிகு உயர் கல்வித் துறை*

2017 ஜூலை 3]

அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும், மருங்காபுரி தொகுதி மக்கள் நன்றிக் கடன் செலுத்துகின்ற வகையில், ஓர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை அமைக்க, மறுபரிசீலனை செய்ய வேண்டுமாய் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாணாக்கர்கள் உயர் கல்வி பெற வேண்டுமென்ற நோக்கத்தோடு, அந்தப் பகுதியில் ஓர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கின்றார். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் எண்ணமான, அனைவரும் உயர் கல்வி பெற வேண்டுமென்ற நோக்கத்தோடு, கடந்த காலங்களில் தேவைக்கேற்ப, ஆங்காங்கே புதிய கல்லூரிகளைத் தொடங்கியதோடு மட்டுமல்லாமல், புதிதாக பாடப் பிரிவுகளையும் தொடங்கி, கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் படிக்க வேண்டுமென்று எண்ணுகின்ற மாணவர்களின் விருப்பத்தை நிறைவு செய்கின்ற வகையில், அந்த மாணாக்கர்களின் சேர்க்கைக்கு இடமில்லை என்கின்றபட்சத்தில், கூடுதலாக சேர்க்கை சதவிகிதத்தையும் உயர்த்தி, ஆங்காங்கே அவர்கள் உயர் கல்வி பெறுகின்ற வாய்ப்பை உருவாக்கித் தந்திருக்கின்றார்கள். அந்த வகையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையான திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை தொகுதி, மருங்காபுரி ஒன்றியத்தில் ஒரு புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியைத் தொடங்குவதற்கு, தேவைக்கேற்ப ஆராய்ந்து, மாண்புமிகு அம்மா அவர்களின் வழி தொடரும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து, அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கா. கதிர்காமு அவர்கள்.*

டாக்டர் கா. கதிர்காமு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டத்தின் தலைநகரமாக விளங்கும் தேனி மாநகரில் தனியார் கல்லூரிகள் அதிகளவில் உள்ளன. அதேபோன்று பெரியகுளம் தொகுதியில், பெரியகுளம் பகுதியிலும் தனியார் கல்லூரிகள் அதிகளவில் உள்ளன. ஆனால், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஒன்றுகூட இல்லை. எனவே, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் எங்களது பெரியகுளம் தொகுதியில், தேனி மற்றும் பெரியகுளம் இரண்டுக்கும் பொதுவாக, மையப் பகுதியில், அமைத்துத் தர வேண்டும். தொழிலாளர்களின் குழந்தைகள், வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகள், அங்கு அதிகளவில் உள்ளனர். அவர்கள் மேல்நிலைப் பள்ளியை முடித்தவுடன், உயர் கல்வி படிப்பதற்காக தனியார் கல்லூரியை நாட வேண்டியுள்ளது. அவர்களால், தனியார் கல்லூரிகளில் கேட்கின்ற கட்டணங்களைச் செலுத்த முடியாத சூழ்நிலை உள்ளதால், ஓர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை தேனிக்கும், பெரியகுளத்திற்கும் சேர்த்து அவற்றின் மையப் பகுதியில் அமைத்துத் தருவீர்களேயானால், ஏழைக் குழந்தைகள் அதிகளவில் பயன்பெறுவார்கள். மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் இதில் கவனம் செலுத்தி, அந்தப் பகுதியில் ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை அமைத்துத் தரவேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.*

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சார்ந்திருக்கக்கூடிய தேனி மாவட்டத்திலே ஒரு அரசுக் கல்லூரியும், 3 அரசு உதவிபெறும் கல்லூரிகளும், 2 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளும், 6 சுயநிதிக் கல்லூரிகளும் என மொத்தம் 12 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்கப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்த மாவட்டத்தில் இருக்கக்கூடிய மாணாக்கர்களுடைய தேவையை அக்கல்லூரிகள் பூர்த்திசெய்து கொண்டிருக்கின்றன. அம்மா அவர்களின் அரசானது இன்றைக்கு அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய தலைமையிலே தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. எதிர்காலங்களில், மாணாக்கர்களுடைய எண்ணிக்கை கூடுதலாக வருகின்ற*

2017 ஜூலை 3]

பட்சத்திலே மேலும், கல்லூரிகள் தேவைப்படின், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை அரசானது பரிசீலிக்கும் என்பதைச் சொல்லி அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 115, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம், மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

115—

நெல் கொள்முதல் நிலையம்

***14622—திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம்:**

மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஜெயங்கொண்டம் தொகுதி, தா.பழூர் ஒன்றியம், இடங்கண்ணி மற்றும் அண்ணங்காரன்பேட்டை கிராமங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் தொகுதிக்குட்பட்ட தா.பழூர் ஒன்றியம், இடங்கண்ணி மற்றும் அண்ணங்காரன்பேட்டை ஆகிய கிராமங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறக்க விவசாயிகளிடமிருந்து கோரிக்கை ஏதும் வரப்பெறாததாலும், நெல் வரத்து இல்லாத காரணத்தாலும், நடப்பு கொள்முதல் பருவத்தில் நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்படவில்லை. விவசாயிகளிடமிருந்து கோரிக்கை வரப்பெற்றால், தேவைக்கேற்ப, நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம் அவர்கள்.*

திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருங்காலத்திலே இந்தியக் குடியரசுத்*